DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
O.S.No. 335 /2024
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW-1 |
| Name | : **முத்துசாமி** |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.01.2026 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு முதலாவது சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது. வாதியின் தாயார் பேச்சியம்மாளுக்கு பிராது 2 வது தபசில் சொத்தைப் பொறுத்து அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பட்டா அசல் **வா.சா.ஆ.1** ஆகும். வாதியின் தாயார் பிராது 1 வது தபசில் கண்ட சொத்தை தனது மகளான ராமலட்சுமிக்கு கடந்த 25.11.2004 ஆம் தேதியன்று எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் **வா.சா.ஆ.2** ஆகும். வாதியின் சகோதரியான ராமலட்சுமியிடமிருந்து வாதி, பிராது 1 வது தபசில் சொத்தை கடந்த 23.01.2023 ஆம் தேதியன்று கிரையம் வாங்கிய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **வா.சா.ஆ.3** ஆகும். வாதி கடந்த 03.08.2024 ஆம் தேதியன்று பிரதிவாதி மீது வாசுதேவநல்லூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **வா.சா.ஆ.4** ஆகும். வாசுதேவநல்லூர் காவல் துறையினர் வழங்கிய புகார் மனு ஏற்ப்புச் சான்று அசல் (C.S.R. Copy) **வா.சா.ஆ.5** ஆகும். வாதி பிரதிவாதி மீது கடந்த 12.08.2024 ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர்

தென்காசி அவர்களிடம் கொடுத்த புகார் மனு நகல் மற்றும் ரசீது அசல் **வா.சா.ஆ.6** ஆகும்.04.06.2024 ஆம் தேதியன்று பிரதிவாதி மீது வாதி முதல்வர் தனிப்பிரிவுக்கு அனுப்பிய புகார் மனுவின் நகல் மற்றும் அஞ்சலக ரசீது மற்றும் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.7** ஆகும். 04.06.2024 ஆம் தேதியன்று பிரதிவாதி மீது வாதி கோட்டாட்சித் தலைவர் சங்கரன்கோவில் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனுவின் நகல் மற்றும் அஞ்சலக ரசீது மற்றும் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.8** ஆகும். வாதி ஆக்கிரமித்து கட்டியுள்ள இடத்தின் புகைப்படம் (எண்ணிக்கை 3 ) **வா.சா.ஆ.9** ஆகும் (குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்படுகிறது. ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.) பிராது மாதிரி வரைபடம் **வா.சா.ஆ.10** ஆகும். வாதியின் தாயார் பேச்சியம்மாளின் இறப்பு சான்று கணினி நகல் **வா.சா.ஆ.11** ஆகும். வாதி மற்றும் வாதியின் மனைவி தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் பிரதிவாதி மீது கடந்த 05.09.2024 ஆம் தேதியன்று கொடுத்தபுகார் மனு நகல் மற்றும் ஒப்புகை ரசீது அசல் **வா.சா.ஆ.12** ஆகும். ஆணையர் அறிக்கை **C1** ஆகும். ஆணையர் வரைபடம் **C2** ஆகும்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

(Sd/-) P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.